அரசு கள்ளர் விடுதிகளில் சேர ஜூன் 18 வரை விண்ணப்பிக்கலாம்

திண்டுக்கல், ஜூன் 10: திண்டுக்கல் மாவட்டத்தில் அரசு கள்ளர் விடுதிகளில் சேர தகுதியான மாணவர்கள் வருகிற 18-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநரகம் வெளியிட்ட செய்தி குறிப்பு விவரம்:

திண்டுக்கல் மாவட்டத்தில் மாணவர்களுக்கான 5 விடுதிகள், மாணவிகளுக்கான 2 விடுதிகள் என 7 அரசு கள்ளர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. பள்ளி விடுதிகளில் 4 முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் தங்கிப் படிக்கலாம். அனைத்து விடுதி மாணவர்களுக்கும் உணவு, தங்கும் வசதி அளிக்கப்படும். 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்படும். 10, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டிகள் மூலம் நீட், ஜெஇஇ தேர்வுக்கான பயிற்சி அளிக்கப்படும்.

விடுதிகளில் சேருவதற்கான தகுதிகள்: பெற்றோர் அல்லது பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ. 2 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும். இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு 8 கி.மீட்டருக்கு கூடுதலாக இருக்க வேண்டும். இந்த விதி மாணவிகளுக்குப் பொருந்தாது. தகுதியுடைய மாணவர்கள் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளரிடமிருந்தோ அல்லது மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு) அலுவலகத்திலிருந்தோ இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை வருகிற 18-ஆம் தேதிக்குள் சமர்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

520 பயனாளிகளுக்கு ரூ.2.09 கோடியில் நலத் திட்ட உதவிகள்

மாவட்ட ஆட்சியர் வழங்கினார்

உத்தமபாளையம், ஜூன் 10: தேனி மாவட்டம், காமாட்சிபுரத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 520 பயனாளிகளுக்கு ரூ.2.06 கோடியில் நலத் திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் இரா.வைத்திநாதன் புதன்கிழமை வழங்கினார்.

உத்தமபாளையம் வட்டம், காமாட்சிபுரம் ஊராட்சியில் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையக் கூட்டரங்கில் நடைபெற்ற முகாமுக்கு மாவட்ட ஆட்சியர் இரா.வைத்திநாதன் தலைமை வகித்தார். கம்பம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் பி.எல்.ஏ. ஜெகநாத்மிஸ்ரா முன்னிலை வகித்தார்.

இந்த முகாமில், மாவட்ட வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 19 பயனாளிகளுக்கு ரூ.4.94 லட்சத்தில் உதவித் தொகையும், 56 பயனாளிகளுக்கு 56 லட்சத்தில் இ.பட்டாக்களும், 29 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலும், மாற்றுத் திறனாளி நலத் துறை சார்பில், 14 பயனாளிகளுக்கு ரூ.1.14 லட்சத்தில் சக்கர நாற்காலிகளும், மாநில ஊரக வாழ்வாதாரம் இயக்கம் சார்பில், 21 பயனாளிகளுக்கு ரூ.75.80 லட்சத்தில் மகளிர் சுய உதவிக்குழு கடனுதவியும், தோட்டக்கலைத் துறை சார்பில், ரூ.1.15 லட்சத்தில் முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் ரூ. 60 லட்சத்தில் மருத்துவக் காப்பீட்டு அட்டை என பல்வேறு துறைகள் சார்பில் 520 பயனாளிகளுக்கு ரூ.2.09 கோடியில் நலத் திட்டங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜ்குமார், உத்தமபாளையம் வருவாய்க் கோட்டாட்சியர் சையது முகைதீன் இப்ராஹிம், வட்டாட்சியர் பாலசண்முகம், அனைத்துத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தேனி காமாட்சிபுரத்தில் புதன்கிழமை நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த பெண்களுக்கு கடனுதவி வழங்கிய மாவட்ட ஆட்சியர் இரா.வைத்திநாதன். உடன் கம்பம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் பி.எல்.ஏ. ஜெகநாத்மிஸ்ரா.

வீட்டின் பூட்டை உடைத்து நகை, பணம் திருட்டு

நத்தம், ஜூன் 10: செந்துறை அருகே வீட்டின் பூட்டை உடைத்து தங்க நகை, பணத்தை திருடிச் சென்ற மர்மநபரை போலீஸார் தேடி வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகேயுள்ள செந்துறை திருநூத்துபட்டியைச் சேர்ந்தவர் பொன்னுச்சாமி மனைவி லட்சுமி (61). இவர் செவ்வாய்க்கிழமை காலை வீட்டை பூட்டி விட்டு வேலைக்குச் சென்று விட்டார். மீண்டும் பிற்பகலில் திரும்பி வந்த போது, வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

இதைத்தொடர்ந்து, அவர் வீட்டின் உள்ளே சென்று பார்த்த போது பீரோ உடைக்கப்பட்டு அதில் இருந்த 3 பவுன் தங்க நகை, ரூ.42 ஆயிரம் திருடு போனது தெரியவந்தது. இது குறித்த புகாரின் பேரில், நத்தம் காவல் ஆய்வாளர் தமிழ்ச் செல்வம் வழக்குப் பதிவு செய்து வீடு புகுந்து திருடிய மர்மநபரைத் தேடி வருகிறார்.

அசல் நீலம் / சொத்து ஆவணம் காணவில்லை

ஆதார் எண். 5041 7510 9367-ல் குறிப்பிட்டுள்ள முகவரியான க.எண்.9 வல்லபாய் ரோடு, சொக்கிகுளம், மதுரை வடக்கு, மதுரை-2 மற்றும் வருணா ஹில்ஸ் வ்யூ, மதுரை-திருச்சி சாலை, லிங்கவாடி கிராமம், நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம், எனும் முகவரியில் தற்சமயம் குடியிருந்து வரும் திரு.S.சோமசுந்தரம் அவர்களின் மகன் M.S.சரவணன் எனும் 60 வயதுடைய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில் நான் இயக்குநராக உள்ள செந்தூர் ராக்ஸ் எனும் நிறுவனத்தின் பெயருக்கு என்னாலும் எனது மற்ற இயக்குநர்களாக உள்ள M.P.கார்த்திகை பெருமாள் D.ராஜபாண்டியன் அவர்களாலும் கடந்த 08.11.2011-ம் தேதியன்று வள்ளியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் பெற்ற எங்களது அசையா சொத்தின் கிரைய மூல ஆவண எண். 4916/2011 ஆனது தொலைந்துவிட்டது. யாரேனும் அதனை கண்டுபிடித்தால் எனது 8870253333 எனும் கைபேசி எண்ணிற்கும் அல்லது மேல் குறிப்பிட்டுள்ள முகவரிக்கும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பழனியில் வருவாய்த் துறையினரை கண்டித்து ஆர்ப்பாட்டம்

பழனி கோட்டாட்சியர் அலுவலகம் எதிரே வருவாய்த் துறையினரை கண்டித்து புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிபிஐ (எம்எல்) கட்சியினர்.

பழனி, ஜூன் 10: பழனியில் விவசாய நிலங்களில் மண் அள்ளியது தொடர்பாக விவசாயிகள் மீது பொய் வழக்கு பதிய காரணமான வருவாய்த் துறையினரைக் கண்டித்து சிபிஐ (எம்எல்) சார்பில் ஆர்ப்பாட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

ஆயக்குடி பகுதியில் விவசாய நிலங்களில் மண் அள்ளியது தொடர்பாக வருவாய்த் துறையினர் அளித்த புகாரைத் தொடர்ந்து, போலீஸார் விவசாயிகளைக் கைது செய்தனர். வருவாய்த் துறையினர் பொய்யான புகார் அளித்ததாகவும், அவர்களைக் கண்டித்தும் பழனி கோட்டாட்சியர் அலுவலகம் முன் ஆயக்குடி பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் 50-க்கும் மேற்பட்டோர் சிபிஐ (எம்எல்) கட்சியினருடன் இணைந்து புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு ஒன்றியச் செயலர் பன்னீர்செல்வம் தலைமை வகித்தார். மாவட்ட நிலைக்குழு நிர்வாகிகள் சிவக்குமார், செந்தாமரை, ரவி, ஒன்றிய நிர்வாகி வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிபிஐ (எம்எல்) மாநிலக்குழு உறுப்பினரும், உடல் உழைப்பு தொழிலாளர் சங்க மாநிலச் செயலருமான மீனாட்சி சுந்தரம் கண்டன உரை நிகழ்த்தினார். இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் , வட்டாட்சியர் அலுவலக முற்றுகைப் போராட்டம் நடைபெறும் என ஆர்ப்பாட்டத்தின் போது முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

சாணார்பட்டி அருகே நிதி நிறுவன மேலாளரை கடத்தியவர் கைது: 5 பேர் தப்பியோட்டம்

நத்தம், ஜூன் 10: சாணார்பட்டி அருகே தனியார் நிதி நிறுவன மேலாளரை கடத்திச் சென்று ரூ.40 லட்சம் கேட்டு மிரட்டியவரை செவ்வாய்கிழமைஇரவு போலீஸார் கைது செய்தனர். மேலும் தப்பியோடிய 5 பேரைத் தேடி வருகின்றனர்.

பாலகிருஷ்ணன்

காளிதாஸ்

திண்டுக்கல் மாவட்டம், அய்யலூரைச் சேர்ந்த பாலகிருஷ்ணன், கோபால்பட்டியில் உள்ள தனியார் நிதி நிறுவனத்தில் மேலாளராக பணியாற்றி வருகிறார். இவர் கன்னியாபுரம் பகுதியில் இரு சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தார். அப்போது, கார், இரு சக்கர வாகனங்களில் வந்த மர்மக் கும்பல் அவரை கடத்திச் சென்றதாக கூறப்படுகிறது. கன்னிகாபுரம் பாலம் அருகே வைத்து பாலகிருஷ்ணனை தாக்கிய கும்பல், ரூ.40 லட்சம் பணம் கேட்டு மிரட்டியதுடன், வெற்றுத் தாள்களில் கையொப்பமும் வாங்கியதாகத் தெரிகிறது.

இதுதொடர்பாக காவல்துறை அவசரக் கட்டுப்பாட்டு மையத்துக்கு சிலர் தகவல் அளித்தனர். உடனே திண்டுக்கல் புறநகர் காவல் துணைக் கண்காணிப்பாளர் சங்கர் தலைமையில் சாணார்பட்டி போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று காரில் சென்ற கும்பலை விரட்டிச் சென்றனர். இதனால், அதிகாரிபட்டி அருகே பாலகிருஷ்ணனை இறக்கிவிட்டு அந்தக் கும்பல் தப்பியது. இதையடுத்து, பாலகிருஷ்ணனை மீட்ட போலீஸார், இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரித்தனர்.

பாலகிருஷ்ணன், காளிதாஸ் ஆகியோர் தனியார் நிறுவனத்தில் பங்குதாரர்களாக இருப்பதாக அறிமுகப்படுத்திக்கொண்டு, வி.எஸ்.கே. கும்பபட்டி பகுதியைச் சேர்ந்த பொதுமக்களிடம், ஏலத்துக்கு வரும் நகைகள், முதலீடுகளுக்கு அதிக லாபம் கிடைக்கும் என ஆசை வார்த்தை கூறினர். இதை நம்பிய பொதுமக்கள் நகை, பணமாக சுமார் ரூ.40 லட்சம் வரை இருவரிடமும் வழங்கினர்.

இந்த நிலையில், ஊர்த் திருவிழா நடைபெறவுள்ளதால் முதலீடு செய்த பொதுமக்கள் தங்களது நகை, பணத்தை திருப்பித் தருமாறு காளிதாசிடம் கேட்டுள்ளனர். இதுதொடர்பாக பாலகிருஷ்ணனிடம், காளிதாஸ் விளக்கம் கேட்டபோதும் உரிய பதில் கிடைக்கவில்லை. இதையடுத்து காளிதாஸ் நண்பர்கள் மூலம் பாலகிருஷ்ணனை கடத்திய போது போலீஸில் சிக்கினர் என்றனர்.

இதற்கிடையே, தங்களது முதலீட்டுத் தொகையை பாலகிருஷ்ணன், காளிதாஸ் ஆகியோரிடமிருந்து மீட்டுத் தருமாறு கோரி 30-க்கும் மேற்பட்டோர் சாணார்பட்டி காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தனர்.

கனரா வங்கி — தலைமை அலுவலகம் - பெங்களூரு — மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I
8வது தளம், கனரா டவர்ஸ், 524, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 044 - 2849 6339, 2849 6900.
மின்னஞ்சல் : cb2361@canarabank.com

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையுறுதி (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) மற்றும் 9 உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு மற்றும் பிணையாளர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்ட வங்கியில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடுசெய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை **கனரா வங்கியின்** கீழே குறிப்பிட்டுள்ள கிளையின் அதிகாரப்பூர்வ அறிவாளரால் அடையாளம் / பெயரிலை / ஆக்கப்பூர்வ கவாதீனம் (Symbolic / Physical / Constructive Possession) செய்யுள்ள சொத்துக்களை கடன்தாரர் / ஜாமின்தாரர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, **"உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு", மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு என்கிற அடிப்படையில் 30.06.2026** ஆம் தேதியன்று **(காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை (5 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்))** விற்பனை செய்யப்பட்ட உள்ள மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

வ.எண்.1: சொத்து மீட்பு மேலாண்மை கிளை I : கடன்தாரர் பெயர் & முகவரி: 1) **M/s. I K LEATHER EXPORTS,** உரிமையாளர் திரு. **K.இமாம் அமசது கான்,** முதல் தளம், 13/2, காட்டூர் சடையப்பன் தெரு, பெரியமேடு, சென்னை - 600003. 2) திரு. இமாம் அமசது கான், எண்.49, காசிம் அலி நகர், நாகல் நகர், குன்னாணம்பட்டி, அடயனூத்து, திண்டுக்கல் - 624003. மேலும் ஒரு முகவரி: 16/6, கோவேலாங் முத்து கிராமணித் தெரு, பெரியமேடு, சென்னை - 600003,

கடன் நிலுவைத் தொகை : 31.05.2026 அன்றுள்ளபடி ரூ.1,92,39,741.69/- அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் வங்கிக்கு ஏற்பட்ட இதர இடைநிகழ் செலவுகள்.

சொத்துக்களின் விவரம்: சொத்து 1: திண்டுக்கல் மறு-பிரிவு நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, திண்டுக்கல் வட்டம், பாலகிருஷ்ணபுரம் கிராமத்தின் சர்வே எண்.706/2, 706/3B இல் உள்ள நிலத்தின் பரப்பளவு 1.81ஏக்கர்களை மனைகளாகப் பிரிக்கப்பட்ட சர்வே எண்.706/2, 706/3B, புதிய சர்வே எண்.706/3B1A இல் அடங்கிய "வெங்கடேஸ்வரா நகர்", மனை எண்.6 இன் பரப்பளவு 1740ச.அடி. எல்லைகள்: வடக்கில்: கிழக்கு மேற்காக சாலை; தெற்கில்: சர்வே எண்.704 இல் உள்ள நிலம்; கிழக்கில்: மனை எண்.7; மேற்கில்: மனை எண்.5; நிலத்தின் நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம் 40 அடி, கிழக்கு மேற்காக தென் புறம் 40அடி; வடக்குத் தெற்காக கிழக்கு புறம் 41.3அடி, வடக்குத் தெற்காக மேற்கு புறம் 45.9அடி திண்டுக்கல் சார்பதிவாளர் அலுவலகம், நாகல்நாயக்கன்பட்டி அலுவலகத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட திரு. இமாம்அமுமத்கான் அவர்களின் பெயரில் அமைந்துள்ள சொத்து. Cersai Id 400023512271.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 10,50,000/- | டேவணித்தொகை ₹ 1,05,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 50,000/-

சொத்து 2: திண்டுக்கல் மறு-பிரிவு நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, திண்டுக்கல் வட்டம், அடயனூத்து கிராமத்தின் சர்வே எண்.527/1C, 528/1A, 368இல் உள்ள நிலத்தின் பரப்பளவு 73சென்ட்களை மனைகளாகப் பிரிக்கப்பட்ட சர்வே எண்.368 பகுதியில், இல் அடங்கிய மனை எண்கள்.6, 7 & 8 ஆகியவற்றின் பரப்பளவு 3393ச.அடி. சர்வே எண்.368 பகுதியில் அடங்கிய மனை எண்.6 இன் பரப்பளவு 1073ச.அடி. சர்வே எண்.368 பகுதியில் அடங்கிய மனை எண்.7 இன் பரப்பளவு 1160ச.அடி. சர்வே எண்.368 பகுதியில் அடங்கிய மனை எண்.8 இன் பரப்பளவு 1160 ச.அடி. எல்லைகள்: வடக்கில்: சர்வே எண்.368 பகுதி இல் உள்ள நிலம்; தெற்கில்: கிழக்கு மேற்காக 20அடி பொதுச் சாலை; கிழக்கில்: மனை எண்.5பகுதி (மனையின் மேற்கு புறம்); மேற்கில்: சர்வே எண்.368பகுதி இல் உள்ள நிலம்; நிலங்களின் நாற்பரப்புகள்: மனை எண்.6 விஸ்தீரணம் 1073ச.அடி. கிழக்கு மேற்காக இருபுறம் 37அடி, வடக்குத் தெற்காக இருபுறம் 29அடி. மனை எண்.7 விஸ்தீரணம் 1160ச.அடி. கிழக்கு மேற்காக இருபுறம் 40அடி, வடக்குத் தெற்காக இருபுறம் 29அடி. மனை எண்.8 விஸ்தீரணம் 1160ச.அடி. கிழக்கு மேற்காக இருபுறம் 40அடி, வடக்குத் தெற்காக இருபுறம் 29அடி. Cersai Id 400023512272.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 29,80,000/- | டேவணித்தொகை ₹ 2,98,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 50,000/-

சொத்து 3: திண்டுக்கல் மறு-பிரிவு திண்டுக்கல் இணை - II சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, திண்டுக்கல் வட்டம், அகரம் கிராமத்தின் சர்வே எண்.2328/6A இல் அடங்கிய பரப்பளவு 2.58 ஏக்கர்களை மனைகளாகப் பிரிக்கப்பட்ட VIP சிட்டி A பிளாக் இல் உள்ள மனைகள். 1) சர்வே எண்.2328/6, மனை எண்.418 இன் பரப்பளவு 1200ச.அடி. எல்லைகள்: வடக்கில் : மனை எண்.419; தெற்கில்: மனை எண்.417; கிழக்கில்: தெற்கு வடக்காக 20அடி சாலை; மேற்கில்: மனை எண்.423; மனை எண்.418 - 1200ச.அடி நிலத்தின் நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக இருபுறம் 40அடி, வடக்குத் தெற்காக இருபுறம் 30அடி. 2) சர்வே எண்.2328/6, மனை எண்.417 இன் பரப்பளவு 1200ச.அடி. எல்லைகள்: தெற்கில்: மனை எண்.416; கிழக்கில்: தெற்கு வடக்காக 23அடி சாலை; மேற்கில்: மனை எண்.424; வடக்கில் : மனை எண்.418; மனை எண்.418 - 1200ச.அடி நிலத்தின் நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக இருபுறமும் 40அடி, வடக்குத் தெற்காக இருபுறமும் 30அடி. Cersai Id 400023512275.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 7,70,000/- | டேவணித்தொகை ₹ 77,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 50,000/-

சொத்து 4: திண்டுக்கல் பதிவு மாவட்டம், நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவு மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், பிள்ளையார் நத்தம் கிராமம், நகராட்சி பணியாளர் காலனி சர்வே எண்.85/2B/1A1 இல் அடங்கிய மனை எண்.13 எல்லைகள்: வடக்கில்: மனை எண்.12; தெற்கில்: 20அடி கிழக்கு மேற்காக சாலை; கிழக்கில்: மனை எண்.14; மேற்கில்: 20அடி தெற்கு வடக்காக சாலை. நிலத்தின் நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக இரு புறமும் 40அடி; வடக்கு தெற்காக இரு புறமும் 60 அடி; மனை எண். 13 இன் மொத்த விஸ்தீரணம் 2400ச.அடி. Cersai Id 400023512274.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 17,30,000/- | டேவணித்தொகை ₹ 1,73,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 50,000/-

சொத்து 5: திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் இணை - I சார்பதிவாளர் அலுவலகம், திண்டுக்கல் வட்டம், சீலப்பாடி கிராமம் சர்வே எண். 541/7A, 7B, 541/4 & 542/1, புதிய சர்வே எண்.541/7A இல் அடங்கிய (பண்ணை கப்பையா வைத்தியர் காலனி) 1) புதிய சர்வே எண்.541/7A1, மனை எண்.26 பகுதி இன் 2087ச.அடியில் மேற்கு புறத்தின் பரப்பளவு 745-1/4ச.அடி. எல்லைகள்: தெற்கில்: 23அடி கிழக்கு மேற்காக சாலை; மேற்கில்: மனை எண்.27; கிழக்கில்: மனை எண்.26பகுதி இன் பரப்பளவு 2087ச.அடியில் 1338-3/4ச.அடி; வடக்கில்: சர்வே எண்.541/2A இல் உள்ள நிலம். நிலத்தின் நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக இருபுறமும் 12.1/2அடி ; வடக்குத் தெற்காக இருபுறமும் 59.3/4அடி. 2) புதிய சர்வே எண்.541/7A1, மனை எண்: 27 இன் பகுதியில் உள்ள 2926ச.அடியில் கிழக்கு புறம் பகுதியின் பரப்பளவு 679 1/2ச.அடி. எல்லைகள்: தெற்கில்: 23அடி கிழக்கு மேற்காக சாலை; மேற்கில்: மனை எண்.27 பகுதியின் பரப்பளவு 2926ச.அடி; கிழக்கில்: மனை எண்.26; வடக்கில்: சர்வே எண். 541/2A இல் உள்ள நிலம்; நிலத்தின் நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக இருபுறம் 12 1/2அடி, வடக்குத் தெற்காக இரு புறம் 59 3/4அடி. வகை எண்கள் 1 & 2 கூட்டாக பரப்பளவு 1424.3/4ச.அடி. திண்டுக்கல் இணை -I சார்பதிவாளர் அலுவலகத்தின் அதிகாரவரம்பிற்குட்பட்டு அமைந்துள்ள இந்த சொத்து திரு. இமாம்அமுமத்கான் அவர்களின் பெயரில் அமைந்துள்ளது. Cersai Id 400023512276.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 34,80,000/- | டேவணித்தொகை ₹ 3,48,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 50,000/-

சொத்து 6: திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம் (கிழக்கு), அடயனூத்து கிராமம், புதிய சர்வே எண்.866/1A1A & 3A1A, பழைய சர்வே எண்.866/1. 866/3A இல் அடங்கிய மாருதி நகர் – II, (மனை எண் 15- விஸ்தீரணம் 1440ச.அடி, மனை எண்.37-விஸ்தீரணம் 1520ச.அடி, மனை எண்.38-விஸ்தீரணம் 1504ச.அடி) ஆகியவற்றில் அமைந்துள்ள பரப்பளவு 4464.00ச.அடி காலி மனைகள் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. மனை எண்:15- இன் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.14; தெற்கில்: மனை எண்.37; கிழக்கில்: சர்வே எண்.866/4A & 2C இல் உள்ள நிலம்; மேற்கில்: 20அடி வடக்குத் தெற்காக சாலை; மனை எண்கள்: 37 & 38- இன் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.15; தெற்கில்: மனை எண்.39; கிழக்கில்: சர்வே எண்.866/4A & 2C இல் உள்ள நிலம்; மேற்கில்: 20அடி வடக்குத் தெற்காக சாலை. Cersai Id 400023512273.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 28,80,000/- | டேவணித்தொகை ₹ 2,88,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 50,000/-

வ.எண்.2: சென்னை ARMB I கிளை கடன்தாரர் பெயர் & முகவரி: 1.M/s Royale Creations பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திரு. V. காசிசீப் மன்சூர், முகவரி 1: எண் – 19/39, ஐந்துக்குட்டான் தெரு, பெரியமேடு, சென்னை - 600003 முகவரி 2: பழைய எண்.8, புதிய எண்.12, ஜோதி வெங்கடாச்சலம் சாலை, அட்கின்சன் சாலை, வேப்பேரி, சென்னை-600012 முகவரி 3: எண்.18/3, கருப்பூர் பிடல் தெரு, ஆம்பூர், வேலூர் மாவட்டம் - 635802. முகவரி 4: எண்.13, முதல் தளம், பெரியண்ணா மேஸ்திரி தெரு, பெரியமேடு, சென்னை - 600003. 2.திரு. V. காசிசீப் மன்சூர், த/பெ. திரு. சுமீம் பாஷா, எண்.15, சின்னா மஸ்தி தெரு, ஆம்பூர், வேலூர் மாவட்டம் - 635802 மேலும் ஒரு முகவரி: 18/3, கருப்பூர் பிடல் தெரு, ஆம்பூர், வேலூர் மாவட்டம் – 635802

கடன் நிலுவைத் தொகை : 31.05.2026 அன்றுள்ளபடி ரூ.6,38,85,306.04 தனுடன் எதிர்கால வட்டி மற்றும் வங்கிக்கு ஏற்பட்ட இதர இடைநிகழ் செலவுகள்.

சொத்து விபரம்:சொத்து 1:- வகை A பழனி பதிவு மாவட்டம், வேடசந்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, வேடசந்தூர் வட்டம், வேடசந்தூர் கிராமத்தின் 2ஏக்கர் மற்றும் 35சென்ட்களில் மத்திய பாகத்தில் சர்வே எண்.1222 இல் அமைந்துள்ள பரப்பளவு 21901 ½ சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்:- வடக்கில்:- ஓடை.; தெற்கில்:- திரு. காசிசீப் மன்சூர் அவர்களால் வாங்கப்பட்ட நிலம்; கிழக்கில்:- திரு. உசேன் அகமத் அவர்களால் வாங்கப்பட்ட நிலம்; மேற்கில்:- திரு. காசிசீப் மன்சூர் அவர்களால் வாங்கப்பட்ட நிலம்; நிலத்தின் நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம் 126 ½அடி, கிழக்கு மேற்காக தென் புறம் 121 ¼ அடி; தெற்கு வடக்காக கிழக்கு புறம் 164 ½ அடி; தெற்கு வடக்காக மேற்கு புறம் 188 ¼அடி; மொத்தம் 21901 ½ அதனுடன் அனைத்து வழக்கமான நடைவழி மற்றும் இதர வழக்கமான உரிமைகள். வகை B பழனி பதிவு மாவட்டம், வடமதுரை சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, வேலைவாகோட்டை கிராமம், சர்வே எண்.919/1 அதன் புதிய சர்வே எண்.919/1A இல் உள்ள பரப்பளவு 1ஏக்கர் மற்றும் 14சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் அதனை வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்ட "Na Na நகர்" என்ற பெயரில் உள்ள மனைப்பிரிவின் மனை எண்.2 இன் பரப்பளவு 695சதுர அடி அதனுடன் 1/9 பங்கு உரிமை, நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்:- வடக்கில் :- கிழக்குமேற்காக 20அடி அகல சாலை; தெற்கில்:- ஓடை.; கிழக்கில்:- மனை எண்.3; மேற்கில்:- மனை எண்.1; நிலத்தின் நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம் 20அடி, கிழக்கு மேற்காக தென் புறம் 20அடி; தெற்கு வடக்காக கிழக்கு புறம் 188.3/4அடி; தெற்கு வடக்காக மேற்கு புறம் 181.1/4அடி; மொத்தம் 22315 ½ சதுர அடி அதனுடன் அனைத்து வழக்கமான நடைவழி மற்றும் இதர வழக்கமான உரிமைகள். வகை II: பழனி பதிவு மாவட்டம், வடமதுரை சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, வேலைவாகோட்டை கிராமம், சர்வே எண்.919/1 அதன் புதிய சர்வே எண்.919/1A இல் உள்ள பரப்பளவு 1ஏக்கர் மற்றும் 14சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் அதனை வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்ட "Na Na நகர்" என்ற பெயரில் உள்ள மனைப்பிரிவின் மனை எண்.2 இன் பரப்பளவு 695சதுர அடி அதனுடன் 1/9 பங்கு உரிமை, நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்:- வடக்கில் :- கிழக்குமேற்காக 20அடி அகல சாலை; தெற்கில்:- ஓடை.; கிழக்கில்:- மனை எண்.3; மேற்கில்:- மனை எண்.1; நிலத்தின் நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம் 20அடி, கிழக்கு மேற்காக தென் புறம் 20அடி; தெற்கு வடக்காக கிழக்கு புறம் 37அடி; தெற்கு வடக்காக மேற்கு புறம் 32 ½அடி; மொத்தம் 695 சதுர அடி. அதனுடன் கிழக்கு மேற்காக மற்றும் தெற்கு வடக்காக 20அடி நடைவழி உபயோக உரிமை மற்றும் தெற்கு வடக்காக வேலைவாகோட்டை - செட்டிப்பட்டி சாலை 16அடி அகல நடைவழி மற்றும் இதர வழக்கமான உரிமை வடமதுரை சார்பதிவாளர் அலுவலகத்தின் அதிகாரவரம்பிற்குட்பட்ட சொத்து. Cersai Id 400023587745.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 36,50,000/- | டேவணித்தொகை ₹ 3,65,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 50,000/-

சொத்து 3:- வகை I: பழனி பதிவு மாவட்டம், வேடசந்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, வேடசந்தூர் வட்டம், வேடசந்தூர் கிராமத்தின் 2ஏக்கர் மற்றும் 35சென்ட்களில் வடமேற்கு புறத்தில் சர்வே எண்.1222 இ